சுருக்கம்

பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியியல் சார்நிலைப் பணி – 2017–2018 ஆம் ஆண்டிற்கான தலைமை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வுக்கு தகுதிபெற்ற முதுநிலை வரைதொழில் அலுவலர்களின் தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.கே. 1) துறை

அரசாணை (டி) எண். 126

நாள்:31 .05.2017

ஹேவிளம்பி , வைகாசி 17, திருவள்ளுவராண்டு 2048

படிக்கவும்:–

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 5 கடித எண்.156/கமு.1/ 2017, நாள் 31.01.2017.

********

ஆணை:–

நெடுஞ்சாலைத் துறையில் 2017–2018 ஆம் ஆண்டிற்கான தலைமை வரைதொழில் அலுவலர்களாக பதவி உயர்வு பெறத் தகுதி வாய்ந்த பின்வரும் 10 முதுநிலை வரைதொழில் அலுவலர்களின் தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண். | திருவாளர்கள் |
|---|---|
| 1 | நா.கோவிந்தன் |
| 2 | வெ.இராமசாமி |
| 3 | வி.இராமநாதன் |
| 4 | வே.மகாலெட்சுமி |
| 5 | ஆர்.சசிகலா |
| 6 | எஸ்.வள்ளிநாயகம் |
| 7 | பி.கருணாமூர்த்தி |
| 8 | பி.கே.சசிகலா |
| 9 | என்.இராமகிருஷ்ணன் |
| 10 | பி.என்.துரைராஜ் |

2. மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள தலைமை வரைதொழில் அலுவலர் பதவி உயர்விற்கு தகுதி வாய்ந்த முதுநிலை வரைதொழில் அலுவலர்களின் பெயர்கள் அடங்கிய தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலில் இடம் பெற்றோருக்கு வழங்கப்படும் பதவி உயர்வானது

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் பெறப்படும் ஆணைகளுக்குட்பட்டு முற்றிலும் தற்காலிகமாக வெளியிடப்படுகிறது.

3. இந்த தேர்ந்தோர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ள காரணத்தால் மட்டும் இவர்கள் தலைமை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வுக்கு உரிமை கோர இயலாது.

4. இந்த தேர்ந்தோர் பட்டியலின் நகலொன்றினை திரு பி.என்.துரைராஜ் அவர்களுக்கும் மற்றும் பணி நிலையில் அவருக்கு மூத்தவர்களுக்கும் அளித்து அதற்கான ஒப்புகையை பெறும்படியும், அந்நகலினை பெற்றுக் கொண்ட இரண்டு மாத காலத்திற்குள் அவர்களிடமிருந்து மேல்முறையீடு ஏதேனும் பெறப்பட்டால் அதனை அரசுக்கு அனுப்புமாறும் முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே பத்தி 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள முதுநிலை வரைதொழில் அலுவலர் தற்காலிக தலைமை வரைதொழில் அலுவலர் தேர்ந்தவர் பெயர் பட்டியலில் இடம்பெற்றுள்ளோருக்கு பதவி உயர்வு வழங்க, அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களின் அடிப்படையில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்புமாறும் முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

முதன்மை இயக்குநர் (கூ/பொ), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–25.
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், நெடுஞ்சாலை
மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
கோ.எண்.1723 /எச்.கே.1/ 2017
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

N. [signature]

பிரிவு அலுவலர்